Registered as a NewsPaper பக்கங்கள் 06 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 22 ( 04 - 05 - 1992 ) திங்கட்கிழமை ஓசை: 76

## கல்வி விஸ்தரிப்பிற்கு விசேட நடவடிக்கைகள்

நாட்டின் சகல பாடசாலைகளிலும் விஞ்ஞான, கணித, ஆங்கில போதனையை விஸ்தரிப்பதற்கான விசேட நடவடிக்கைகளைக் கல்வி, உயர் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது. இதன்படி மேற்படி பாடங்களைப் போதிப்பதற்கென இவ் வருடத்தில் குறைந்தது 10,000 ஆசிரியர் நியமிக்கப்படுவர். மேலும் ஆரம்ப கல்வி, சமயக் கல்விப் போதனைக்கும் 5,000 ஆசிரியர் வரை நியமனம் பெறுவர்.

# அரசு ஏற்கும் திட்டத்துடன்

# மீண்டும் யாழ். வருவோம்

## கொழும்பில் பிக்குகள் அறிவிப்பு

(கொழும்பு)

"அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி அரசும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வுத்திட்டம் ஒன்றை விரைவில் யாழ்ப்பாணம் எடுத்துச்செல்லப் போகிறோம்" இவ்வாறு யாழ்ப்பாணம் வந்து திரும்பிய பௌத்த குருமார்கள் கொழும்பில் பத்திரிகையாளரிடம் தெரிவித்தனர்.

''எமது இரண்டாவது யாழ்ப்பாண விஜயம் இம் மாதத்தில் இடம் பெறும், இத்தடவை இன்னும் கூடுதலான பௌத்த பிக்குகளுடனும், விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலிஸாரின் குடும்பத்தினரையும் அழைத்துச் செல்ல இருக்கின்றோம்'' என மேலும் தெரிவித்தனர்.

ராஜகிரியா ஒப்பசேகர புரவிலுள்ள கிரி அமர விகாரையில் நடைபெற்ற இப் பத்திரிகையாளர் சந்திப்பில் பாலத்துரை மாயகம அஸ்ஸாஜி தேரோ, பலப்பிட்டிய சித்தார்த்த மகாநாயக்க தேரோ ஆகியோர் மேலும் தெரிவித்ததாவது.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகமாக ஏற்றுக் கொள்ளும் தீர்வுத் திட்டம் ஒன்றை நாம் ஏற்றுக் கொள்வோம் எனப் புலிகள் கூறினர். பாரபட்சமற்ற சமாதானத் திட்டம் ஒன்றை தாம் தழுவிக் கொள்ள தயாராக இருப்பதாகவும் புலிகள் கூறினர் எனவும் கூறினர்.

## மன்னாரில் துப்பாக்கிச் சூடு இரு தமிழர் பலியாகினர்

மன்னாரில் இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலுள்ள தமிழர்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் சித்திரவதைகளை மேற்கொண்டனர்.

கத்தியினால் வெட்டி சித்தி

[6 ஆம் பக்கம் பார்க்க].

## 'பச்சைப்பட்டி' நடவடிக்கை புலிகளால் முறியடிப்பு

மன்னார் மாவட்டத்தில் சிறிலங்கா படையினரால்மேற்கொள்ளப்பட்ட ''பச்சைப் பட்டி—3'' இராணுவ நடவடிக்கை புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட இருமுனை இப்பாரிய இராணுவ நடவடிக்கை தோல்வியில் முடிவடைந்துள்ளது. கனரக வாகனங்கள், டாங்கிகள்சகிதம்வெளியேறிய இராணுவத்தினர் மீது உயிலங்குளம் பகுதியில் வைத்து புலிகளால் வழிமறித்து தாக்கப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## 8 தமிழ்ப் பெண்களை காணவில்லை,என அறிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலுள்ள மாவடி வாழைச்சேனைக் காடுகளில் விறகு சேகரிக்கச் சென்ற எட்டுத் தமிழ்ப் பெண்களைக் காணவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் மட்டக்களப்பில் மக்கள் கடத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இவர்கள் முஸ்லிம் காடையர்களால் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

## வடக்கு கிழக்கு இணைப்பு சிங்கள கட்சிகள் எதிர்ப்பு

இனப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வொன்றைக் காண்பதற்கு அமைக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழுவில் அங்கத்துவம் வகிக்கும் யு. என். பி., சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் இரு மாகாணங்களும் பிரிக்கப்படவேண்டும் என்பதில் உறுதியாக இருப்பது போல் தெரிகிறது என்று நேற்றிரவு பி.பி.சி அறிவித்தது.

எனவே பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடமிருந்து இரு தரப்பினரும் ஒத்துக் கொள்ளக் கூடிய தீர்வு வெளிவரும் வாய்ப்பு அதிகம் இல்லையென்றேபடுகிறது என்று பி. பி. சி தெரியப்படுத்தியது.

## புல்லுமலையில் சுற்றிவளைப்பு ஒருவர் பலி; 6 பேரை காணவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் புல்லுமலைக் கிராமத்தைச் சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் ஒரு அப்பாவித் தமிழ்மகனை வெட்டிக் கொன்றதுடன் பத்துப்பேரை கைது செய்துள்ளனர். மேலும் ஆறுபேரை காணவில்லை என அறிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது: கடந்த வெள்ளியன்று அதிகாலை பெரியபுல்லுமலை, அரந்தலாவை, 19 ஆம் கட்டை, உன்னிச்சை ஆகிய நான்கு இராணுவ முகாம்களிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் புல்லுமலைக் கொலனியைச்சுற்றிவளைத்து ஒருவரை வெட்டிக் கொன்றுள்ளனர்.

35 ஆம் கிராமத்தைச் சேர்ந்த சரவணை என்பவரே இராணுவத்தினரால் கொடூரமாக வெட்டிக்கொல்லப்பட்டவராவார். சித்திரவேல் (புல்லு

6] ஆம் பக்கம் பார்க்க]

## இனப் பிரச்சினைக்கு பௌத்த மகாசங்கம் தீர்வை தரவேண்டுமாம்

(கொழும்பு)

அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் ஒத்துக்கொள்ளும் வகையில் பௌத்த மகா சங்கம் ஆலோசனை வழங்குவதன் மூலம், வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு சகல தரப்பு மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தீர்வைக் காண்பதற்கு உதவ முடியும் என்று தகவல் ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா தெரிவித்தார்.

மாலிகாகந்த வித்தியோதய பிரிவினையில் வண. ஹிக்கடுவ சிறி சுமங்கல மகா தேரோ ஞாபகார்த்த வைபவத்தில்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மண்ணை நாம் காக்கிறோம் கலையை நீங்கள் காக்கிறீர்கள்

### கலைஞர்களுக்கு விசு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

''நாம் ஆயுதம் ஏந்தித் தமிழ் மண்ணையும், மக்களையும் பாதுகாத்துவருகின்றோம் கலைஞர்கள் தமிழ்க் கலைகளையும், பண்பாட்டையும் கட்டிக்காத்து வருகின்றனர். இக்கலைஞர்களை விடுதலைப் புலிகளாகிய நாம் பெரிதும் மதிக்கின்றோம், போற்றுகின்றோம், பாராட்டுகின்றோம்'' இவ்வாறு நேற்று நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெற்ற இரண்டாம் நாள் தமிழிசை விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. விசு அவர்கள் கூறினார். அவர் தொடர்ந்து

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழீழ மீட்பு நிதி 536 பேருக்கு மீளளிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்புநிதிக்கு கடனளித்தோரில் கடன் மீளளிப்பிற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட 536 பேரின் விபரங்களை தமிழீழ விடுதலைப்புலிகள் நிதிப்பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இவர்களுக்கான கடன்மீளளிப்பு இம்மாதம் 16ஆம், 17ஆம் திகதிகளில் நடைபெறும் எனவும் நிதிப்பிரிவினர் அறிவித்துள்ளனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட 536 பேரின் விபரங்கள் நாளைமுதல் ஈழநாதம் பத்திரிகையில் வெளிவரும்.

## பல்லாயிரம் மக்கள் திரண்ட தமிழிசைப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தின் கலைஞர்களை ஒன்றிணைத்து விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்டுவரும் தமிழிசை விழா நேற்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இரண்டாவது நாளாக நேற்று நடைபெற்ற விழாவிற்கு ஆயிரக்கணக்கான மக்கள் அணிதிரண்டு வந்திருந்தனர். விழாவையொட்டி நல்லூர் கந்தசுவாமி ஆலய மைதானம் வர்ண மின் விளக்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தேவை

1992ம் ஆண்டு A/L படிக்கும் மாணவிக்கு பௌதிகவியல், இரசாயனவியல், ஆகிய பாடங்களை வீட்டில் வந்து படிப்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தேவை. தொடர்பு:- மே/பா, ஈழநாதம்

(2526)


# அநுரா - சந்திரிக்கா மோதல் வீதிக்கு வந்துள்ளது

## - கொழும்புப் பத்திரிகைகள் தகவல்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் காணப்பட்ட முரண்பாடுகள் மே தின ஊர்வலத்துடன் தெருவுக்கு வந்துள்ளதாக கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளது.

இக்கட்சித் தலைவியின் இரு புதல்வர்களான அநுராவிற்கும், சந்திரிக்கா குமாரணதுங்காவிற்கும் இடையே நிலவிய மோதல்கள் தெருவுக்கு வந்துள்ளதாகவும், அப்பத்திரிகைகள் மேலும் குறிப்பிட்டுள்ளன.

கொழும்பு கிருலப்பனையிலிருந்து வெள்ளியன்று ஆரம்பித்த கூட்டு எதிர்க்கட்சி மே தின ஊர்வலத்தில் இரு ஒலி பெருக்கி பூட்டிய வாகனங்கள் சுதந்திரக் கட்சியின் தலைவர்கள் என்று இரண்டு வெவ்வேறு பெயர்களை அறிவித்துக் கொண்டு சென்றதால் ஊர்வலத்தில் கலந்துகொண்ட சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் அதிர்ச்சியால் வாய் மூடிச் சென்றனர் எனறும் தெரிவிக்கப்படுகிறது.

# அம்பாறைத் தமிழர்கள் பிரேமாவிற்கு மகஜர்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் மீளக்குடியமரும் தமிழ் மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு அப் பிரதேசங்களுக்குள் முஸ்லிம் ஊர்காவல் படையினர் பிரவேசிப்பது தடை செய்யப்பட வேண்டும் என அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கம் கேட்டுள்ளது.

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு இச்சங்கம் அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றிலேயே இது பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் மகாசங்கம் விடுத்துள்ள ஏனைய கோரிக்கைகள் வருமாறு;

பொத்துவிலுக்கும் சம்மாந்துறைக்கும் தனியான தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை உருவாக்க வேண்டும் இவற்றிற்கு தனியான பிரதேச சபைகள், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவ வேண்டும்

ஏற்கனவே அமைக்கப்பட்ட ஆலையடி வேம்பு, கல்முனை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை அரசாங்க வர்த்தமானியில் பிரகடனம் செய்ய வேண்டும்.

காரைதீவுக்கு தனியான பிரதேச சபை அமைத்தல் வேண்டும்.

மேலும் வன்செயல் காலத்தில் மரணமடைந்தவர்களினதும் காணாமல் போனவர்களினதும் குடும்பத்திற்கு நஷ்டஈடு நிவாரணப்பணிகள் வழங்கப்படுவதை துரிதப்படுத்த வேண்டும். இந்த உறவினரின் சத்தியக்கடதாசியின் அடிப்படையில் மரண அத்தாட்சிப் பத்திரம்வழங்கஏற்பாடுசெய்ய வேண்டும். கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் அல்லது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களை விரைவில் விடுதலை செய்ய அல்லது நீதி விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். இவ்வாறுவிடுதலை செய்யப்படுவர்கள் பிரஜைகள் குழுக்கள்முன்னிலையில் அவ்வப்பகுதி உதவி அரசாங்க அதிபரின் ஊடாக மருத்துவப் பரிசோதனையின்பின்னர்பெற்றோரிடம் கையளிக்கப்பட வேண்டும்.

அம்பாறை மாவட்டத்திற்கு மேலதிக அரசாங்க அதிபராக தமிழர் ஒருவரை நியமனம் செய்தல்வேண்டும்.

மீளக்குடியமரச் செல்லும் மக்களுக்காக விசேட வீடமைப்புத் திட்டங்கள் ஏற்படுத்த வேண்டும்.

மீளக்குடியமரும் மக்கள் மாதாந்த வருமானம் ஒன்றைத் தரும் தொழில்ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் வரை அக் குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருள்களை தொடர்ந்து வழங்குதல் வேண்டும்.

# உலக மாற்றத்திற்கு ஏற்ப மாற்றங்கள் வேண்டும்

## -அநுரா

(கொழும்பு)

உலகரங்கில் ஏற்பட்டு வரும் அரசியல் மாற்றங்களுக்கேற்ப சிறிலங்கா தனது வெளிநாட்டுக் கொள்கைகளை வகுத்துக் கொள்ள வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் அநுரா பண்டாரநாயக்கா கூறியுள்ளார்.

கொழும்புறோட்டரிக்கழகத்தினர்களிடையில் பேசிய அவர் மேலும் கூறுகையில் சோவியத் யூனியன் என்றும் லெனின், றொட்ஸ்க்ரி ஆகியோரால் கட்டியாளப்பட்ட முன்னாள் வல்லரசு சிதைவுற்றதற்குப் பின்னர் கற்பனைவாதசோசலிசம் என்பதும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அமெரிக்கா தனித்ததொரு வல்லரசு என்று நிலைநாட்டப்பட்டுள்ளது. அமெரிக்காவில் யார் ஆட்சியில் அமருகின்றார்களோ அவர்களால் உலகம் முழுவதிலும் நடக்கும் அரசியல்செயல்களில் செல்வாக்கு செலுத்த முடியும். எனவேதான் சிறிலங்கா போனற சிறிய நாடுகள் யதார்த்த நிலைமையை உணர்ந்து பூகோள அரசியல் நிலைமைகளுக்கு ஏற்ற வெளிநாட்டுக் கொள்கைகளை விடுக்க வேண்டியது அவசியமாகின்றது,

இந்த உண்மைகளை உணராமல் 1977-ல் பதவிக்கு வந்த ஐ. தே. க. அரசு கடைப்பிடித்த மோசமான இராஜதந்திரத் தவறுகளே இந்திய இலங்கை ஒப்பந்தம் போன்றன ஏற்படுவதற்கும், ஒரு காலத்தில் சிறிலங்காவின் நண்பனாக இருந்த இந்தியா பகைமைப் போக்கில் செல்வதற்கும் வழி வகுத்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## 7பேர் கைது

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு காரில் பிரயாணம் செய்த ஏழு பேர் கடந்த திங்கட்கிழமை சந்தேகத்தின் பேரில் அநுராதபுரம் பொலிஸரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அநுராதபுரம் பொலிஸ் சோதனை நிலையத்தில் இவர்களை சோதனை செய்த போது ஒருவரிடம் நூறு தங்கப்பவுணும் (859 கிராம்) பதினையாயிரம் ரூபா பணமும் இருந்தது என்றும் இவர் தமது பெயரில் இரண்டு சாரதி அனுமதி பத்திரங்களை வைத்திருந்ததனால் சந்தேகம் கொண்டபொலிசார் காரில் பிரயாணம் செய்த ஏழு பேரையும் தடுத்து வைத்து விசாரணை செய்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## 22 தினங்களில் 79 கொலைகள்

தென்னிலங்கைப் பகுதிகளில் ஏப்ரல் மாதத்தின் இருபத்தியிரண்டு தினங்களுக்குள் 79 கொலைகள் இடம் பெற்றிருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புது வருட தினங்களிலேயே கொலைகள் அதிகம் நிகழ்ந்துள்ளன. பழையபகைமைக்கு பழிவாங்கும் நடவடிக்கையாக அதிக கொலைகளும் மேலும் சில படுகொலைகள் காதல் சம்பவங்களினாலும் இடம் பெற்றுள்ளன

புதுவருட தினங்களில் நிகழ்ந்த இருபத்தைந்து படுகொலைகளுக்கு மது போதைகாரணமாக இருந்துள்ளது. இன்னும் சில கொலைகள் சூதாட்டக் குகைகளிலும் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதே தேளை ஏப்ரல்மாதத்தில் 22 தினங்களில் 73 சிறு திருட்டுச் சம்பவங்களும் 50 கொள்ளைச் சம்பவங்களும் நிகழ்ந்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் கூறுகின்றன.

# வெளிநாட்டு முதலீட்டால் பாதகமான விளைவுகள்

## - மத்தியவங்கி அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்து வருவது சில பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதாக மத்தியவங்கி தனது ஆண்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

போட்டி காரணமாக தற்போதைய தொழில் முயற்சிகள் பல பாதிக்கப்பட வேண்டிய நிலை ஏற்படும் சாத்தியமுள்ளதாகவும்,

வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்து வருவதால் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் வெளிநாட்டு ஆதிக்கம் அதிகரிக்கக் கூடிய அச்சம் உருவாகியுள்ளதாகவும், மத்திய வங்கி தனதறிக்கையில் தெரிவித்துள்ளது.

1991ஆம் ஆண்டின் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம் 4. 8 வீதமாக இருந்துள்ளதாகவும், 1990 இல் இது 6. 2 வீதமாக இருந்ததாகவும்,

1990 ஆம் ஆண்டில் 21 வீதமாக இருந்த பணவீக்கம் கடந்த வருடத்தில் 12 வீதமாக குறைவடைந்துள்ளதாகவும்.

விவசாயம், நிலக்கரி நிர்மாணத்துறை ஆகியவற்றின் முன்னேற்றங்களும் மோசமாகவே 1991 இல் இருந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது.

# கிளி. தொண்டர் ஆசிரியர் பொதுக் கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்குகான விசேட பொதுக்கூட்டம் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை 9-00 மணிக்கு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் சகல ஆசிரியர்களையும் தமது பூரண விபரங்களுடன் சமூகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் விரைவில் கல்வி அமைச்சுடன் இந்நியமனம் சம்பந்தமாக நேரடித் தொடர்பு கொள்ள இருப்பதால் தவறாது இக்கூட்டத்திற்கு அனைத்து தொண்டர் ஆசிரியர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.


# நினைவு கூருகின்றோம்... 1992 -05- 04

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

லெப். டயான் (சின்னத்துரை தேவலிங்கம் - ஆரையம்பதி, மட்டக்களப்பு.)

காமினி (காமினி பேபியன் அனஸ்டீன் - குருநகர், யாழ்ப்பாணம்.)

1988 ஆம் ஆண்டு ஆலையடிவேம்பில் இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய -

லெப். சுரேஷ் (குழந்தைவேல் தவராசா- அக்கரைப் பற்று- 08 அம்பாறை.)

இதே முற்றுகையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

லெப். மைக்கல் (யோசப்பிள்ளை தியாகராஜா - அக்கரைப்பற்று -08 அம்பாறை.)

திராய்க்கேணியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய -

2 -ம் லெப். சரத் (மார்க்கண்டு கண்ணதாசன் - ஆர். கே. எம். வீதி, காரைதீவு -01, அம்பாறை.)

1990 ஆம் ஆண்டு அம்பாறை, கல்முனை, இறக்காமம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த -

அலெக்ஸ் (அகமட் றியாஸ் - முஸ்லிம் வித்தியாலய வீதி, மருதமுனை, நீலாவணை.)

1991 ஆம் ஆண்டு தமிழீழக் கடற்பரப்பில் (பருத்தித் துறை) சிறிலங்காக் கடற்படைக் கப்பல் மீது கரும் புலித் தாக்குதலை மேற்கொண்டு வீரச்சாவெய்திய -

கப்டன் ஜெயந்தன் (சம்புக்குட்டி பத்மநாதன் - மாரியம்மன் கோயிலடி, சோதிபுரம், மட்டக்களப்பு.)

கப்டன் சிதம்பரம் (பெரியதம்பி சந்திரன் - நடராசா வீதி, வல்வெட்டித்துறை.)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(சி/4359)



# AIKAYES அறிவித்தல்

கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கான

வடபகுதி

## தனியார் உணவு விநியோகம்

எமது 20-03-92 திகதியிடப்பட்ட பத்திரிகை அறிவித்தல் பிரகாரம் கீழ் வரும் பகுதிகளின் விநியோகம் நடைபெறவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தயவு செய்து வெற்றுக் கலன்கள், வெற்றுப் பைகள், அடையாள அட்டை, அல்லது அத்தாட்சிச் சான்றிதழ் ஆகியவற்றுடன் விநியோகத்திற்கான பதிவு விண்ணப்பத்தையும் கொண்டு வரவும்.

அனுப்பி வைக்கப்பட்ட மண்ணெண்ணெய் எமக்குக் கிடைக்காததால், பிறிதொரு திகதியில் விளம்பரப்படுத்தி விநியோகிக்கப்படும்.

''யாழ். பகுதி மக்களை விரைவில் சந்திப்போம்.''

| உதவி அரசாங்க அதிபர் பிரிவு | இடம் | திகதி | நேரம் |
|---|---|---|---|
| 1 சாவகச்சேரி, பளை | 'திருக்கணிதம்' | 06-05-92 | 8-00 — 6-00 |
| | ஸ்ரேசன் வீதி, சாவகச்சேரி | 07-05-92 | 8-00 — 6-00 |
| 2 நல்லூர் | 'பழைய மடம்' | 10-05-92 | 8-00 — 6-00 |
| | நல்லூர் ஆலய மேற்குவீதி நல்லூர் | 11-05-92 | 8-00 — 6-00 |

Aikayes - Jaffna முத்துக் கிருஷ்ணர் வீதி, (நாகம்ஸ் சினிமா முன்பாக) சுன்னாகம்

(2531)

# வெள்ளையர் - கறுப்பர்கள் என அமெரிக்கா இரு கூறாய் பிரிந்துள்ளது

## -- லொஸ் ஏஞ்சல்ஸ் கலவரம் வெளியிடும் உண்மை

அமெரிக்காவின்லொஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தில் தொடங்கிய கலவரமானது அமெரிக்காவில் கறுப்பர் மற்றும் வெள்ளையர்களுக்கு இடையேயான உறவின் நிலையையும், கறுப்பர்கள் அமெரிக்காவில் வசிக்கும் நிலையையும் உலகின் கண்களுக்கு தெரியப்படுத்தியுள்ளது என்றால் மிகையானதல்ல. அமெரிக்க அதிபர் நியமித்த ஆணைக்குழு பிரகடனம் செய்தது போல அமெரிக்கர்கள் கறுப்பர் மற்றும் வெள்ளையர் என்ற இரு கூறுகளாகப் பிளவுபட்டிருக்கின்றது என்ற உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயுள்ளது.

கறுப்பர்களுக்கும் வெள்ளையர்களுக்கும் இடையே அமெரிக்காவில் நடைபெறும் எந்தவொரு மோதலிலும் இடைநடுவில் நின்று துன்பத்தை அனுபவிக்க வேண்டியவர்களாக ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் இருக்கின்றார்கள் என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் இப்போதைய கலவரத்தின் உண்மையான-அடித்தளமான காரணிகளுக்குத் தீர்வு காணும் முயற்சிகளை மேற்கொள்வார் என்பதற்கு எந்த அறிகுறியையும் காணமுடியவில்லை. கறுப்பர்களிடையே நிலவும் வேலையின்மையும் தேசிய மட்டத்திலான அதிகாரப் பகிர்வு அமைப்புக்களில் கறுப்பர்களின் பங்கின்மையும் இப்போதைய பிரச்சினைக்கான அடிப்படைக் காரணங்களெனலாம்.

நூற்றுக்கணக்கான செனட்டர்களைக் கொண்ட அமெரிக்கக் காங்கிரசில் ஒரு கறுப்பர் கூட உறுப்பினர்களாக இல்லை என்பதைக் கவனிக்க வேண்டும். பொருளாதாரத் துறையிலும் கூட ஒரு சில கறுப்பர்களே பலம் மிக்கவர்களாக உள்ளனர்.

வாஷிங்டனில் தமக்கும் ஆதிக்கம் வேண்டுமென்றுகேட்கும் கறுப்பர்களின் குரலுக்கு அதிபர் ஜோர்ஜ்புஷ்யும் வெள்ளையர் நிர்வாகமும் 'இல்லை' என்றே பதிலளிக்கிறது. வாஷிங்டனில் கறுப்பர்களின் செல்வாக்கை அங்கீகரிப்பதன் வாயிலாக காங்கிரசில் ஒரு சில கறுப்பர்கள் உறுப்பினர்களாகக் கூடும்.

குடியரசுக் கட்சியைச் சேர்ந்த பலரும் கூட தற்போதைய சமூக அமைப்பை இல்லாமல் கறுப்பர்களின் மீது தான் குற்றம் சாட்டுகின்றார்கள். குற்றச் செயல்கள் அதிகரிப்பு, வேலையின்மை, போதைப்பொருள் பாவனை போன்ற பல தீய பழக்கங்களுக்கும் கறுப்பர்களே காரணம் என்று அவர்கள் கருதுகின்றனர்.

நூற்றாண்டு காலமாக நீடித்து வரும் இன ஒதுக்கல் பிரச்சினைகளுக்கு ஒரு இரவில் தீர்வு கண்டு விடமுடியும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது தான். ஆனால் முக்கியமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாக வேண்டும் என்பதை எவரும் வலியுறுத்த முடியும். இந்த வகையில் புஷ் நிர்வாகம் மாபெரும் தோல்வியடைந்துள்ளது. புஷ் நிர்வாகம் வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீடு கருச்சிதைவு செய்து கொள்வதற்கான பெண்களின் உரிமை போன்ற விடயங்களில் பழைமைவாத கன்சர்வேட்டிவ்களின் நிலையையே கொண்டுள்ளது இது 'தாராளதன்மை' என்ற சொல்லைக் கூட ஒரு கெட்ட வார்த்தையாகக் கருதும் எல்லைவரை சென்றுள்ளது.

> லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் தொடங்கி அமெரிக்காவின் பலவேறு மாநிலங்களிலும் பரவிய இனக் கலவரம் பற்றி அகில இந்திய வானொலியின் செய்தியாளர் **டி. வி. பரசுராம்** வாஷிங்டனிலிருந்து எழுதிய குறிப்பின் மொழியாக்கம். இக்கலவரத்தில் 44 பேர் உயிரிழந்ததுடன் 2000க்கும் அதிகமானோர் காயமடைந்தும், 50கோடி டாலர் பெறுமதியுடைய உடைமைகள் சேதமாக்கப்பட்டும் இருந்தது தெரிந்ததே.

முன்னர்எப்போதும் காணப்படாதவாறு வெள்ளையரில் பலர் கூட லொஸ்ஏஞ்சல்ஸ் நீதிமன்றத்தின் வெள்ளை ஜூரர்கள் மீதுவிசனம்கொண்டுள்ளனர். உயர் பொலிஸ் அதிகாரிகளும், குடியுரிமை அமைப்புக்களின் தலைவர்களும் கூட கடுமையாகவும் உடனடியாகவும் நடவடிக்கை எடுக்கும்படி அதிபர் புஷ்ஷை வற்புறுத்தியிருந்தார். ஆனால் புஷ் இதனைச் செய்ய ஆரம்பிப்பதற்குஏறத்தாழ நாற்பத்தெட்டு மணி நேரத்திற்கும் மேல் எடுத்துக்கொண்டார்.

இதேவேளை மற்ற நாடுகளின் மனித உரிமை மீறல்கள் பற்றியும் பொலிசாரின் அட்டூழியங்கள் பற்றியும் சம்பந்தப்பட்ட நாடுகளின் அரசுகளின் கருத்தைக் கேட்பதற்கு இடமளிக்காமலே புஷ் நிர்வாகம் கருத்தை தெரிவித்துவிடும் என்பதையும் இங்கு கவனிக்க வேண்டும்;

மீண்டும் இத்தகைய இனக் கலவரமொன்று வெடிக்குமா? என்பதுவே இப்போதைய முக்கிய கேள்வியாகும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக 'ஆம்' என்று தான் பதிலளிக்க வேண்டியுள்ளது. கறுப்பர்களிடையே விரக்தியும், வெறுப்பும் குடிகொண்டுள்ளன என்பது உண்மை. ஒரு சிறு பொறி மட்டுமே தேவையாக உள்ளது அந்தப் பொறி மீண்டும் கிடைக்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் நாகரிகமடைந்த சமூகத்தின் மீது தாக்குதல்கள் நடைபெறுவதைத் தவிர்க்க முடியாது.

அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷும், அமெரிக்க நிர்வாகமும் ஏனைய நாடுகளில் நிலவும் நீதியின்மை, சமத்துவமின்மை என்பவற்றின்பால் காட்டும் அதேயளவு அக்கறையை தமது சொந்த நாட்டு விவகாரங்களிலும் எதிர்காலத்தில் கவனம் செலுத்துதல் வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் மட்டுமே லொஸ் ஏஞ்சல்சின் சம்பவம் போன்றவை மீண்டும் நிகழ்வதை தவிர்க்க முடியும். அது இல்லாவிட்டால் மற்றநாடுகளின் மனித உரிமை மீறல்கள் பற்றி பேசும் தகுதியை அமெரிக்கா இழந்து விடக்கூடும்.

# உயர் நிலைப் பாதுகாப்புஏற்பாடுகள் உயர் ஆயத்தமாய் இருக்கவேண்டும்

## - இந். பாதுகாப்பமைச்சர் சரத்பவார்

(டில்லி)

தற்போதைய பாதுகாப்பு சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு உயர் நிலைப் பாதுகாப்பு ஏற்பாடுகள் உயர் ஆயத்த நிலையில் இருக்க வேண்டுமென பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் கூறியுள்ளார்.

நூறாவது தரைத்தாக்கு சுப்பர் சோனிச் போர் விமானத்தை இந்திய விமானப் படையிடம் ஒப்படைத்த பின்னர் செய்தியாளர்களிடம்பேசுகையில் மேலும் கூறியதாவது;

சக்தி மிக்க ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நடவடிக்கைகள் மூலம் உள்நாட்டிலேயே பெருமளவில் உற்பத்தி செய்வதை உறுதிப்படுத்த அதிக தரம் வாய்ந்த திட்டமிடுதலும், படைகளிடையேஒருங்கிணைப்பும் அவசியம் என்று வலியுறுத்தினார்.

மேலும் பிரான்ஸ் மற்றும் பிரிட்டனின் நுட்பம் மிகுந்த ஜெட் விமானங்களை மதிப்பிடவும் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார். இஸ்ரேலிய விமானப்படையும், திட்டங்களை அளித்திருப்பதாகக் கூறினார்.

அத்துடன் அமெரிக்கா இந்திய கூட்டுக்கடற்படைப் பயிற்சித் திட்டத்தில் எந்த வித மாறுதலும் இல்லை என்றும் தெரிவித்தார்.

மேலும் அசட்டுத் துணிச்சலுடன் கூடிய நடவடிக்கை எதிலும் புதுடில்லிக்கு எதிராக எடுக்க வேண்டாம் எனவும் அவர் இஸ்லாமாபாத் அரசை எச்சரித்தார்.

# மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க படை வேண்டும்

## -- டாக்டர் எஸ். ராமதாஸ்

(சென்னை)

மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பேணிப்பாதுகாக்கவென்றே படை ஒன்றை அமைக்க வேண்டிய தேவை குறித்து பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

பொலிசாரின் அட்டூழியங்களைக் கண்டனம் செய்யவென்று ஒழுங்கு செய்யப்பட்ட பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்;

பொலிஸ் அதிகாரிகளுக்கு மக்கள் பயப்படத்தேவையில்லை பொலிசாரின் அத்துமீறல்கள் அபாயகரமான அளவுக்கு அதிகரித்து விட்டன எனவும் குறிப்பிட்டார்.

# தமிழக சட்டப் பேரவையில் இன்று விசேட கூட்டம்

( சென்னை )

தமிழ் நாடு சட்டப் பேரவையின் விசேட சட்டம் ஒன்றை இன்று கூட்டுவதற்கு சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா ஒழுங்கு செய்துள்ளார்.

தமிழ்நாடு சட்டப் பேரவையின் செயலாளர் இம் மாதம் ஐந்தாம் திகதியன்று நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக வேண்டு மென்று தமிழ்நாடு உச்ச நீதிமன்றம், ஆணை பிறப்பித்திருப்பதன் பின்னணியில் இவ் அவசர கூட்டம் பற்றி சபாநாயகர் அறிவித்துள்ளார்.

கோவைமாலை முரசு ஆசிரியர் சுந்தர் உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்த மனுவொன்றின் அடிப்படையிலேயே உச்சநீதிமன்றம் இவ் ஆணையை பிறப்பித்துள்ளது.

இதனிடையே கடந்த இருபத்தெட்டாம் திகதியன்று சட்டப்பேரவை கூடிய போது சட்டப்பேரவை செயலாளர் உச்சநீதி மன்றத்திலிருந்து வரும் எந்தத் தாக்கீதுகளையும் ஏற்கக் கூடாது என்று சட்டப்பேரவைத் தலைவர் ஆணை பிறப்பித்திருந்தது தெரிந்ததே.

# கசப்புணர்வை ஆராய ஆம்புட்ஸ்மன்குழுநியமனம்

(சென்னை)

தமிழகத்தில் பத்திரிகைகளுக்கும் மாநில அரசுக்குமிடையில் அண்மையில் எழுந்துள்ள கசப்புணர்வு பற்றி ஆராய ஆம்புட்ஸ்மன் குழுவொன்றை அமைப்பது என பத்திரிகையாளர்களின் நான்கு அமைப்புகள் முடிவு செய்துள்ளன.

சென்னை பத்திரிகையாளர் சங்கம் தென்னிந்தியபத்திரிகையாளர் சம்மேளனம், சென்னை நிருபர்கள் சங்கம், சென்னை பிரஸ்கிளப் ஆகியவற்றின் பிரதிநிதிகள் சென்னையில் கடந்த வெள்ளி கூடி முடிவு செய்தனர். இந்த ஆம்புட்ஸ்மன் குழுவில் மூத்த பத்திரிகையாளர்களும், நீதிபதிகளும் இடம்பெறுவார்கள் என்றும் பத்திரிகையாளர் அமைப்புகள் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

பத்திரிகைகள் சில தரக்குறைவாக எழுதுவது உட்பட அரசுக்கும், பத்திரிகைகளுக்கும் இடையிலான கசப்புணர்வுகளை ஆராய்ந்து அறிவிக்க தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அவ் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன,

# அமெரிக்க நீதி அமைப்பு தோல்வி கண்டுவிட்டது

## கறுப்பு இன தலைவர்கள் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

நாட்டில் நீதித்துறை அமைப்பின் முறை தோல்வி அடைந்து விட்டது என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் உடன் பேச்சு நடத்திய கறுப்பினத் தலைவர்கள் புகார் செய்துள்ளனர்.

அவர்கள் மேலும் பேசுகையில் பொலிசாரின் மிருகத்தனமான கொடுங்கோன்மை தடுத்து நிறுத்தப்பட வேண்டுமெனவும், கறுப்பினத்தவர்களிடையே நிலவும் வேலையில்லாத்திண்டாட்டம் போக்கப்படவேண்டுமெனவும் வறுமைப்பிரச்சனை தீர்க்கப்படவேண்டுமெனவும்யோசனைதெரிவித்தனர்.

இதேவேளை லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் இந்தியர்களுக்கு சொந்தமான பல கடைகளும் கூட சூறையாடப் பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மேலும் அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள கலவரம் நியூயோர்க் நகரத்திற்கும் அதனைச் சூழவுள்ள நகரங்களுக்கும் பரவியுள்ளது. அத்துடன் வெள்ளை இனத்தவர்களை பொலிஸார் நிரபராதியெனத் தீர்ப்பளித்த நீதிமன்றத்தின் செயலைப் பல வெள்ளையர்களும் ஏற்றுக் கொள்ளவில்லையென அபிப்பிராய வாக்கெடுப்புகளிலிருந்து தெரியவருகின்றது.

### அமெரிக்காவின் பிடிவாதம்

# இந்தியப் பொருள்களுக்கு கடும் தீர்வை விதிப்பு

(வாஷிங்டன்)

இந்திய மருந்துப் பொருள்களையும், இரசாயனப் பொருள்களையும் தீர்வையின்றிஅமெரிக்காவிற்குள்அனுமதிக்க முடியாது என அமெரிக்கா திட்டவட்டமாக தெரிவித்து விட்டது. இந்த நடவடிக்கை மிகச் சிறியது என்றும் மேலும் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள அமெரிக்கா தீர்மானித்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கவர்த்தகத்துறைப் பிரதிநிதி ஆன்சிநார்டன் வாஷிங்டனில் அமெரிக்காவிலே வசிக்கும் இந்தியர்களிடையே பேசும்போதுஇவ்வாறு தெரிவித்தார்.

வர்த்தகம் காப்புவரி தொடர்பான பேச்சுகளில் இந்தியா அமெரிக்காவுடன் ஒத்துழைக்காததால் அமெரிக்கா இந்த நடவடிக்கையை எடுக்கவேண்டி ஏற்பட்டதென அவர் மேலும் தெரிவித்தார்.

### அயோத்திப் பிரச்சினையைகண்டறிய

# இந்தியப் பிரதமருக்கு கல்யாண்சிங் அழைப்பு

(டில்லி)

அயோத்திப் பிரச்சினையின் உண்மை நிலையைக்கண்டறிய நேரில் வருமாறு உத்தரப் பிரதேச முதல்வர் கல்யாண்சிங் பிரதமர் பி. வி. நரசிம்மராவிற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

குஜராத் மாநிலத்தில்நடைபெற்ற பாரதீய ஜனதாக்கட்சியின் தேசிய சபைக் கூட்டத்தில் பேசிய கல்யாண்சிங் மேலும் கூறுகையில் நேரில் வந்து பார்த்தால் பெரும்பாலான ஐயங்கள் நீங்கிவிடும் என்றும், இது தொடர்பான முஸ்லிம் தலைவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

# நாட்டார் பாடல்களால் தமிழிசை பேணப்பட்டது

## -- தமிழிசை விழாவில் பரா

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு வித்திட்ட இயலிசை நாடகம் என்பனவற்றில் இசைக்கு விழாவெடுக்கின்றோம். பாரம்பரியமான கலை வடிவங்கள் பாட்டுக்கள் யாவும் எழுத்துத் தொடர்பு வருவதற்கு முன்பு வாய்மொழி மூலமாக ஆண்டாண்டு காலமாக அழியாது வளர்ந்ததற்கு இப் பாடல்கள் இசை வடிவில் அக் காலத்து மக்களால் பேணப்பட்டதே முக்கியமானதாகும்.

மனிதன் பறவைகளினதும் விலங்குகளினதும் ஓசைகளை இனங்கண்டு இதிலே மெய்மறந்து ரசித்தான். இந்த ஆய்வின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இசையானது மனித நாகரிகத்துடன் சேர்ந்து வளர்ச்சியடைந்தது.

தமிழர்களுடைய வரலாற்றில் இசை குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கின்றது. குழந்தைகளுக்கான தாலாட்டு முதல் முதிர்ந்து வரும் காலம் வரை இசை அவனோடு தொடர்புடையது. இன்பத்திலும், - துன்பத்திலும் சுகத்திலும் - துக்கத்திலும் தத்தமது உணர்ச்சிகளை வெளிபடுத்தும் பல பாடல்கள் பாடப்பட்டிருக்கின்றன. நாட்டார் பாடல்களிலே இவற்றை நாம் காணலாம். மேலும் அரிவிவெட்டு, கடற்றொழில் போன்ற தொழில்களில் ஈடுபடும் போதும் உற்சாகத்திற்காகப் பாடல்கள் இசைக்கப்பட்டுள்ளன. இன்று இங்கே தமிழிசைக்கு எடுக்கப்படும் விழாவானது இசைத்துறையை மேலும் மெருகூட்டும் என்பதில் ஐயமில்லை.

ஆறு கோடி தமிழ் மக்கள், வாழும் தமிழ் நாட்டில் தமிழ் மொழி, பண்பாடு என்பன பேணப்படுவதை விடவும், இங்கு சிறப்பாகப் பேணப்படுகின்றது. எத்தனையோ நெருக்கடிகளுக்கு மத்தியிலும் எதிரிகள் எமது பண்பாட்டையும், மொழியையும் அழிக்க எடுக்கும் முயற்சிகளுக்கு மத்தியிலும் இங்கு தமிழிசைக்கு விழா எடுக்கப்படுகின்றது

தமிழ்நாட்டில் பிறமொழி ஆதிக்கம் ஏற்பட்டு வருவதைப் பற்றி அண்மையில் சென்னைக்கு சென்றிருந்த மலேசியாவைச் சேர்ந்த தமிழறிஞர் ஒருவர் கூறியிருந்த கருத்து இங்கே சுட்டிக் காட்டத்தக்கதாகும். அவர் தமிழ் நாட்டின் தலைநகரில் மொழி, பண்பாடு என்பன அழிந்து போவதைப் பார்த்து வேதனைப்பட்டு சிறிது காலத்தில் வேற்றுமொழிப் பிரதேசமாகிவிடுவோ என்று அச்சம் தெரிவித்தார்.

தமிழீழப் பகுதிகளில் முன்னெப்போதையும் விட தமிழ் தேசியப் பற்றும், தமிழ் உணர்வும் வளர்ந்திருக்கின்றது. தமிழ், தமிழ் என்று கூறியவர்கள் பேச்சளவில் இருந்தார்களே தவிர செயல் வடிவில் எதையும் மேற்கொள்ளவில்லை. தலைவர் பிரபாகரன் அவர்கள் தான் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் செயல் வடிவம் கொடுத்தவர். உலகில் தமிழ்மொழி அதன் பண்பாடு கலை வடிவங்களான இயலிசை நாடக வடிவங்கள் பேணப்பட வேண்டும் என்ற வகையில் இவ்விழாக்களுக்கு விடுதலைப் புலிகளாகிய நாம் ஒத்துழைப்பை கொடுத்து வருகின்றோம் இந்த வகையில் கலை பண்பாட்டுக் கழகத்தின் பணி குறிப்பிடத்தக்கதாகும்.

இங்கு வாழும் கலைஞர்கள் எமது மக்களின் இன்றைய நெருக்கடிகளை அம்பலப்படுத்தும் வகையிலும், போராட்டத்தின் வீரத்தை வெளிக்காட்டும் வகையிலும் கலைப் படைப்புக்களைப் பெருக்க முன்வர வேண்டும். தமிழர்களுடைய வரலாற்றில் குறிப்பிடக்கூடிய வீரம் செறிந்த பல நிகழ்வுகள் இன்று நடந்து கொண்டிருக்கின்றன.

கரும்புலிகள் மற்றும் தங்கள் உயிரை அர்ப்பணித்த மாவீரர்கள் பற்றி எத்தனையோ காவியங்கள் எழுதப்பட முடியும்; கவிதைகள் பல பாட முடியும். இதற்கு இங்குள்ள கலைஞர்கள் முன்வர வேண்டும் எக்காலத்திலும் தமிழ் மக்களுக்கு கிடைக்காத ஒரு தலைவர்-ஒரு தலைமை இன்று கிடைத்துள்ளது இதனை உணர்ந்து உளப்பூர்வமான ஈடுபாட்டுடன் கலைஞர்கள், கவிஞர்கள் பாடுபட முன்வர வேண்டும்.

# காகித ஆலைஊழியர்களுக்கு நஷ்டஈடு கொடுபடவில்லை

(மட்டக்களப்பு)

1983ஆம் ஆண்டிலிருந்து அவ்வப்போது இடம்பெற்ற வன்செயல் சம்பவங்களினால் வாழைச்சேனை காகித ஆலையைச் சேர்ந்த முப்பத்தியாறு ஊழியர்கள் பலியாகியுள்ளனர். ஆனால் இவர்களின் குடும்பங்களுக்கு இதுவரை நஷ்டஈடோ உதவித் தொகையோ வழங்கப்படவில்லையென்று அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கம் தெரிவித்துள்ளது'

இது தொடர்பாக வாழைச்சேனை காகித ஆலைமுகாமையாளர் கணபதிப்பிள்ளைக்கு இச்சங்கம் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

வன்செயல் சம்பவங்களில் கொல்லப்பட்ட ஊழியர்களின் மனைவி, பிள்ளைகளுக்குரிய கொடுப்பனவு பலியான ஊழியரின் ஓய்வுக் காலம் வரையிலான சம்பளம், சேதங்களுக்கான நஷ்டஈடு, கடன்என்பன வழங்கப்படுவதற்கு பொது நிருவாக சுற்றறிக்கை வழிகோலியுள்ள போதிலும்காகித ஆலை ஊழியர் குடும்பங்களுக்கு எந்த உதவியும் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## துப்பாக்கிப் பிரயோகம்

[குருநகர்]

சிறிலங்கா இராணுவத்தினர் மண்டைதீவு, மண்கும்பான் காவலரண்களில் இருந்து சிறுத்தீவு, யாழ்-பண்ணைக் கரையோரங்களை இலக்கு வைத்து தினமும் துப்பாக்கிப் பிரயோகம் செய்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் காலை, நண்பகல் பிற்பகல் வேளைகளிலும் நள்ளிரவு வேளையிலும் மேற்படி காவலரண்களில் இருந்து இராணுவம் சுடடுக் கொண்டிருந்தது [21]

## தென்பகுதிக்கான போக்குவரத்து சீர்குலைவு

(வவுனியா)

சுமார் ஒரு வாரமாக வவுனியா ஊடாக தென் பகுதிக்கான போக்குவரதது சீர்குலைந்துள்ளது.


வவுனியாவில் அடிக்கடி ஊரடங்கு சட்டம் அமுல் செய்யப்படுவதனாலும் சோதனை முகாம் இராணுவத்தால் பயணிகள் போக்குவரத்திற்கான அனுமதி மறுக்கப்படுவதனாலும் பிரயாணிகள் பெரும் கஷ்டத்தை அனுபவித்து வருகின்றனர்.

வடபகுதிக்கு வரும் எண்ணத்துடன் தென்பகுதியிலிருந்து வவுனியா நகரப்பகுதிக்கு வந்து சேரும் ரயில் பிரயாணிகள் ஆயிரக்கணக்கில் தேங்கியிருக்கின்றனர் என்று தகவல் கிடைத்துள்ளது:

பிரயாணிகள் போக்குவரத்து சீர்குலைந்திருப்பதனால் அரச ஊழியர்கள் கூட சேவை புரிய தம் அலுவலகங்களுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (தி)

---

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 28 — 06 — 1945

உதிர்வு 29 — 04 — 1987

### அமரர் சந்திரசேகரம் கதிரவேலு

(ஆனையிறவுதேசியஉப்புக்கூட்டுத்தாபனமுன்னாள்லிகிதர்)

திதி 04-05-1992

ஆண்டுகள் ஐந்தாகினும் உமது அன்பு நினைவுகள் எம்மனதை விட்டு அகலவில்லை ஐயா

உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மீசாலை வடக்கு,
சாவகச்சேரி.
(சி/2529)

உமது பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, மக்கள், சகோதரர்கள்,
தந்தை, மைத்துனர்மார்

---

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் நடாத்தும்

# தமிழிசை விழா

இடம்: நல்லூர் கந்தசாமி கோவில் வடக்கு வீதி

### மூன்றாம் நாள் 4-5-1992
### திங்கட்கிழமை நிகழ்ச்சிகள்

மாலை 5. 00 மணி தொடக்கம் 6. 00மணிவரை மங்கள இசை

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| திரு. என். ஆர். சந்தானகிருஸ்ணன் | திரு. எஸ். ஜெயராமன் |
| ,, வி. சுப்பிரமணியம் | ,, ஜி சின்னநாதன் |
| ,, கே. கிருஷ்ணதாசன் | ,, ஆர். ஜீவா |
| ,, எஸ். தேவதாசன் | ,, என். வரதன் |

6. 00 மணி தொடக்கம் 6. 45 வரை பாட்டு

செல்வி மேகலா கனகசபை — பாட்டு
செல்வி பாக்கியலட்சுமி நடராசா — வயலின்
திரு. கே. துரைராசா — மிருதங்கம்

6. 45 தொடக்கம் 7 45 வரை பாட்டு

செல்வி கனகாம்பரி பத்மநாதன் — பாட்டு
திரு. எஸ். கோபிதாஸ் — வயலின்
திரு. கே. கண்ணதாசன் — மிருதங்கம்

7. 45 தொடக்கம் 8. 45 வரை பாட்டு

திரு எஸ். குமாரசாமி — பாட்டு
திரு எஸ். வெங்கடேஸ்வரசர்மா — வயலின்
திரு. எஸ். பாலசந்திரசர்மா — மிருதங்கம்

8. 45 தொடக்கம் 9. 15 வரை சிறப்பு விருந்தினர் உரை

1. திரு. இளம்பரிதி அவர்கள் (யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்)
2. வண. பிதா -பிரான்சிஸ் யோசேப் அடிகளார் அவர்கள்
3. திரு. ரவி அவர்கள் (திருமலைத் தொடர்பகம்)

9. 15 தொடக்கம் 10. 15 வரை பாட்டு

திரு. எஸ் திலகநாயகம் போல் — பாட்டு
,, ஆர். ராதாகிருஷ்ணன் — வயலின்
,, எஸ். மகேந்திரன் — மிருதங்கம்
,, கே. துரைராசா — கெஞ்சிரா

10. 15 மணி தொடக்கம் 11. 30 மணிவரை நாதஸ்வரம்

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| திரு கே ஆர். சுந்தரமூர்த்தி | திரு. கே. நித்தியானந்தம் |
| ,, வி.கே. கானமூர்த்தி | ,, பி கணேஸ் |
| ,, வி.கே பஞ்சமூர்த்தி | ,, ஆர். பாஸ்கரன் |
| ,, கே. செலவரட்னம் | ,, என். கணேசன் |

# கூட்டணிப் பிரமுகர்கள் மீண்டும் நாடு திரும்புவர்

(கொழும்பு)

கூட்டணி பிரமுகர்களான எம். சிவசிதம்பரம், ஆர். சம்பந்தன், வீ ஆனந்தசங்கரி ஆகியோர் இந்தியாவிலிருந்து அடுத்தவாரமளவில் இலங்கை திரும்பி அரசியலில் ஈடுபடவுள்ளனர் என கூட்டணிப் பேச்சாளர் தெரிவித்துள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

---

மல்லாகம்

## அருள்மிகு காளிகா தேவி ஆலய வருடாந்த சங்காபிஷேகத் திருவிழாவும் மண்டலாபிஷேகப் பூர்த்திவிழாவும்

## இன்று

சக்திக் கனலே காளியம்மா
சாந்தி தருவாய் தேவியம்மா
சிவனொரு பாகே உமையம்மா
சீலர்க் கருள்வாய் மீனாட்சியம்மா
சுந்தர வதனத் தாயம்மா
சூரனைக் கொன்றாய் சக்தியம்மா
செல்வம் தருவாய் லட்சுமியம்மா
சேவற் கொடியுடை அரசியம்மா
சைவம் தளைத்திட வேண்டுமம்மா
சொல்லில் தூய்மையைத்தாருமம்மா
சோலையிலாடும் வீரியம்மா
சௌக்கியம் அருள்வாய் காமாட்சியம்மா
அச்சம் போக்கிடும் மாரியம்மா
எமைக்காத்தருள் புரிவாய் காளித்தாயம்மா

மேற்படி ஆலய விழாக்கள் சித்திரை மாதம் 22ஆம் திகதி ( 4 - 5 - 1992 ) திங்கட்கிழமை இன்று நடைபெற உள்ளது.

பிரசுரம்
மு. அற்புததேவன்

ஆக்கம்
க. மனோகரன்

[சி/4361]

## சிந்தனைக்கு

ஊருக்குத் தான் உபதேசம்; உனக்கல்ல!
— தமிழ்ப்பழமொழி

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 04-05-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 05

# தனக்கொரு நீதி..?

அமெரிக்காவில் கடந்த சில தினங்களாக இடம் பெற்றுவரும் கறுப்பர் - வெள்ளையர்களுக்கிடையிலான இனக் கலவரத்தில் 44 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். 2000 பேருக்கு மேல் காயமடைந்துள்ளார்கள். 50 கோடி டாலருக்கும் அதிகமான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன. இதேவேளை அமெரிக்காவின் மேற்குக்கரையில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் தொடங்கிய இவ் இனக்கலவரம் அமெரிக்காவின் கிழக்குக் கரைப் பட்டினமான நியூயோர்க் வரையும் பரவியுள்ளது.

உலகின் சமத்துவம், சமநீதி, ஜனநாயகம் என்பவற்றின் பாதுகாவலனாக தன்னைக் காட்டிக் கொள்ளும் அமெரிக்காவில் இனக்கலவரம் என்பது பலருக்கு ஆச்சரியமளிக்கலாம். ஆனால், அமெரிக்காவில் இன்று வெடித்துள்ள இனக்கலவரமானது தற்செயலான ஒரு நிகழ்வினால் ஏற்பட்ட உணர்ச்சிக் கொந்தளிப்பல்ல.

வெள்ளை இனப் பொலிஸார் நால்வரால் தாக்கப்பட்ட கறுப்பினகாரோட்டிக்கு எதிராகவெள்ளையின ஜூரர்கள் மேற்கொண்ட விசாரணையில் நீதி கிடைக்கவில்லை என்பது இவ் இனக்கலவரம் ஏற்பட்டதற்கான ஒரு பொறியே ஒழிய இனக்கலவரத்திற்கான அடிப்படைக் காரணம் அதுவல்ல.

அமெரிக்காவிலுள்ள கறுப்பர்களில், நாம் அறிந்தவர்கள் உலக ஓட்ட வீரரான கால் லூயிசையும், உலக அதிபார குத்துச் சண்டை வீரர்களான முகமது அலியும், மைக்டைசனும் போன்றவர்களே ஆகும், ஆனால், அமெரிக்காவில் உள்ள மொத்தச் சனத் தொகையில் 11 வீதத்தைக் கொண்ட கறுப்பர்களில் பெரும்பான்மையினர் வறுமையில் வாடுகின்றார்கள். தெருவீதிகளில் படுத்துறங்குகின்றார்கள். அவர்களைப் பற்றி நாம் அறிந்திருக்கவில்லை.

இவர்களுக்கு அமெரிக்காவில் சமநீதி கிடைக்கவில்லை. வேலை வாய்ப்பில் புறக்கணிக்கப்படுகின்றார்கள். அரசியலில் ஓரம் கட்டப்பட்டுள்ளார்கள். மனித உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளார்கள். முன்னாள் அமெரிக்க குத்துச்சண்டை வீரரான கெஸ்சியஸ் கிளே - முகமதலி - அமெரிக்கா இராணுவத்தில் சேவையாற்ற மறுத்தமைக்காக சிறையில் அடைக்கப்பட்டார். அதாவது அமெரிக்க வெள்ளையர்கள் கறுப்பின மக்களை ஒரு மனிதராகப் பார்க்கவே இல்லை. அவர்களுக்கு மனித உரிமை உண்டென எண்ணவில்லை.

அண்மையில் இரு கற்பழிப்பு வழக்குகள் அமெரிக்காவில் இடம்பெற்றன. இதில் ஒன்று கறுப்பினரான உலக குத்துச்சண்டை வீரரான மைக்டைசன் மீதான குற்றச்சாட்டு. மற்றது அமெரிக்காவில் பிரபல்யம் மிக்க குடும்பமான கெனடி குடும்பத்தைச் சேர்ந்த செனட்டர் எட்வேட் கெனடியின் மருமகனான ஸ்ரீபன் மீதான குற்றச்சாட்டு. இவ்விரு வழக்குகளிலும், மைக்டைசனும், ஸ்ரீபனும் குற்றவாளிகளா'? இல்லையா என்பதல்ல இங்கு விவகாரம். இவ் வழக்குகளில் அமெரிக்க நீதித்துறையும், பத்திரிகைகளும் நடந்து கொண்ட முறையே பிரதானமானது. மனிதாபிமானத்தையும் மீறி மைக்டைசனை மனித நடத்தைகளுக்கு அப்பாற்பட்டவராகவும் ஒரு மிருக குணம் பொருந்தியவராகவும் அமெரிக்க நீதித்துறையும் பத்திரிகைகளும் சித்தரிக்க முற்பட்டன சித்தரித்தன ஆனால்ஸ்ரீபனை ஓர் நேர்மையானவராகவும் அப்பாவியாகவும் சித்தரிக்க முற்பட்டன இதில் அவர்கள் வெற்றியும் பெற்றார்கள். அதாவது கறுப்பர்களை மனிதராக அல்ல, மிருகமாகவே எண்ணுகின்றனர்.

இதேவேளை நீண்ட காலமாகவே அமெரிக்க புலனாய்வுத் துறையான சி. ஐ. ஏ. யும், அதிகார பீடமான வெள்ளை மாளிகையும் கறுப்பர்கள் விவகாரத்தில் எச்சரிக்கையாகவே இருந்துள்ளன. அமெரிக்காவில் கறுப்பர்களின் உரிமைக்குரலை அவை நசுக்குபவையாகவே செயற்பட்டுள்ளன. அமெரிக்க கறுப்பினத் தலைவரான மாட்டின் லூதர் கிங் சுட்டுக் கொல்லப்பட்டமைக்கும், கறுப்பர்களுக்காகப் பரிந்து பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கெனடி சுட்டுக் கொல்லப்பட்டதற்கும் பின்னணியில் சி ஐ ஏ. இருந்தது என்ற குற்றச்சாட்டே இதை உணர்த்தப் போதுமானதாகும்.

இந் நிலையில் உலகிற்கு ஜனநாயகம் போதிக்கும் அமெரிக்க வெள்ளையர்களால், கறுப்பர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்பது வெளிப்படை. ஆகையால் அமெரிக்கா இனிமேலாவது உலகைத் திருத்தும் முன் தனது தவறைத் திருத்திக்கொள்ளுமா? அல்லது உலகில் வெள்ளையர்கள் மட்டும் தான் மனிதர்களா?

---

### பேராதனை பல்கலைக்கழகத்தில்

# ராக்கிங்கை எதிர்த்து விரிவுரையாளர் பகிஷ்கரிப்பு

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் சிரேஷ்ட மாணவர்கள் ராக்கிங்கை தொடர்வதற்கு கண்டனம் தெரிவிக்கும் முகமாக ஏப்ரல் 30 ஆம் திகதியன்று ஒரு நாள் விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

ஏப்ரல் 23 ஆம் திகதி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடந்த சம்பவங்கள் பற்றி ஆராய்வதற்காகஏப்ரல்28ஆம் திகதி நடத்திய செயற்கமிட்டிக் கூட்டத்தில் இது பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது. அத்துடன் ஒரு அறிக்கையும் வெளியிடப்பட்டது.

ஜனநாயக பூர்வமானமுறைகளில் மட்டுமே மாணவர்கள் தமது எதிர்ப்புகளை வெளிப்படுத்த வேண்டுமெனவும், தமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக வன்முறை அல்லது பயங்கரவாதத்தை நாடுவதை மாணவர்கள் தவிர்க்க வேண்டுமெனவும்அவ் அறிக்கையில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான உறவுகளைச் சுமுகமாக்குவதற்காக மாணவர்கள் ராக்கிங் தொடர்வதை உடன் நிறுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தோட்.தொழிலாளர் பிரச்சினையில் தேசிய கட்சிகள் அக்கறையில்லை

- டி. அய்யாத்துரை

(மஸ்கெலியா)

'கடந்த இருநாறு வருடங்களுக்கு மேலாக நாட்டின் மேன்மைக்காகவும், பொருளாதார உயர்ச்சிக்காகவும் உழைக்கும் தோட்டத் தொழிலாளர் குடியிருக்க சொந்த வீடின்றி, காணியின்றி வாழ்கின்றனர் இந்த மக்களின் முன்னேற்றத்தில இந் நாட்டில் உள்ள தேசிய அரசியல் கட்சிகள் அக்கறை காட்டியதாகச் சொல்ல முடியாது'.

இவ்வாறு மஸ்கெலியா பொது விளையாட்டுத் திடலில் நடைபெற்ற தொழிலாளர் தேசிய சங்கத்தின் மேதின விழாவில் உரையாற்றிய சங்கத் தலைவர் டி. அய்யாத்துரை தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:

இன்று தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் தோன்றியுள்ள பிரச்சினைகள் மட்டுமல்ல, நாட்டில் தோன்றியுள்ள குறிப்பாக இனப்பிரச்சினை வடகிழக்கு யுத்தம் போன்ற பிரச்சினைகளிலும் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தோட்டங்கள் தனியார் மயம் எம்மத்தியில் பல்வேறு கேள்விக் கணைகளை எழுப்பி தொழிலாளர்களைப் பயமுறுத்திக் கொண்டிருக்கின்றன. தோட்டங்கள் தனியார் மயத்தின் மூலமாக தொழிலாளர்கள் எத்தகைய இழப்புக்களை எதிர்நோக்கியிருக்கின்றனர் என்பது மாத்திரமல்ல அத்தகையதோர் சூழல் தோன்றாமல் தொழிலாளர்களை பாதுகாக்க வேண்டியது தொழிற் சங்கங்களின் கடமையாகும். அந்தப் பணியில் நாம் தீவிரமும், உறுதியும் கொண்டு செயல்படுவதோடு தோட்டத் தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டிசார்பிலும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம்.

இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்ற பொறுப்பு சிங்கள அரசியல் கட்சிகளுக்குக் கிடையாது. அதே நேரத்தில் நாட்டில் இன்னுமோர் இனவாதத்தைத் தூண்டுவதற்கும் மலையக தமிழ் இளைஞர்களை கைது செய்து சித்திரவதை செய்வதையும் முக்கிய குறிக்கோளாகக் கொண்டு ஒரு சில இனவாதக் குழுக்கள் செயல் பட்டு வருகின்றன இத்தகைய இனவாதிகள் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் அக்கறையோ பொறுப்போ கொண்டிருக்கவில்லை என்பதும் தெளிவான உண்மை.

வட-கிழக்குப் பிரச்சினையை தீர்க்க அதிக கூடுதலான பங்களிப்பை சிங்கள கட்சிகளும் செய்யக்கடமைப்பட்டுள்ளன எனினும் சிங்களக் கட்சிகள் இதை ஓர் தனிப்பட்ட கட்சியின் அல்லது அரசியற் பிரச்சினையாகக் கருதுகின்றனவே அன்றி அதை தேசிய இனப் பிரச்சினையாகக் கருதவில்லை. வட. கிழக்கு யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட சகல அரசியல் கட்சிகளும், கருத்து மோதல்களை ஒதுக்கி வைத்துவிட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முன் வரவேண்டுமென அய்யாத்துரை கேட்டுக் கொண்டார்.

### மத்திய கிழக்கிற்கான கடவுச்சீட்டை

# விஸ்தரிப்பது நிறுத்தம் பதில்பணிப்பாளர் அறிவிப்பு

(கொழும்பு)

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் ஏற்கனவே வழங்கப்பட்ட மத்திய கிழக்கு நாடுகளுக்கான கடவுச் சீட்டை சகல நாடுகளுக்கும் செல்வதற்கென விஸ்தரித்து அத்தாட்சிப் படுத்தும் நடவடிக்கையைதிணைக்களம் நிறுத்தியுள்ளது என திணைக்களத்தின் பதில் கட்டுப்பாட்டாளர் தெரிவித்தார்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்வதற்கெனவழங்கப்பட்ட கடவுச் சீட்டை சகல நாடுகளுக்கும் செல்வதற்கென விஸ்தரித்துக் கொண்டே சில உரிமையாளர்கள் சர்வதேச போதைவஸ்துக் கடத்தல், போலி ஆவணங்களுடன் பிரயாண காசோலை மாற்றுதல் உட்பட பல குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர் என சர்வதேச பொலிசார்இரகசிய பொலிஸ் திணைக்களத்திற்கு அறிக்கைகள் சமர்ப்பித்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முஜாகிதீன் கட்டுப்பாடு குறித்து

# இடைக்கால சபையில் கருத்து வேறுபாடுகள்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் எல்லா முஜாகிதீன் குழுக்கள் மீதும் ஒருங்கிணைந்த கட்டுப்பாடு இருப்பது குறித்து ஆளும் இடைக்கால சபையில் கருத்து வேறுபாடுகள் நிலவுவதாகத் தெரியவருகிறது.

51 பேர் கொண்ட சபை நேற்று முன்தினம் கூடிய போது ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டிற்கு ஜெனரல் தோஸ்த்றொமின் ஆதரவாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும் சக்தி வாய்ந்த முஜாகிதீன் தளபதிகளில் ஒருவரான அப்துல் ஹக் காபூலிலுள்ள அரசு இன்னமும் விரிவான அடித்தளம் கொண்டதாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். இந்தப்பணியில் ஹிஸ்திஇஸ்லாமியஅமைப்பின் தலைவர் குல்புதின் கேக் மத்தியாருக்கும்பங்குஇருக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

# பொஸ்னியா அதிபர் யூக். இராணுவத்தால் கைது

(பெல்கிரேட்)

யூகோஸ்லாவிய பெடரல் இராணுவம் பொஸ்னிய கர்சகோவியா அதிபர் கலிஜா இஸ்னதோவிக்கை கைது செய்துள்ளது.

பொஸ்னியா தலைநகரில் நடைபெற்ற கடுமையான சண்டைக்குப் பின்னர் அவர் கைது செய்யப்பட்டார். பேர்கெட்டில் ஐரோப்பிய சமுதாயம் ஒழுங்கு செய்த அமைதிப் பேச்சுகளில் கலந்து கொண்டுவிட்டு தலைநகர் திரும்பிய பின்னர் அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

# பத்திரிகையாளர் நீதிமன்றில் முறையிடலாம்

(டில்லி)

சட்ட மன்றத்தின் உரிமை மீறல் விஷயத்தை எந்தவொரு நீதிமன்றத்திலும் முறையிடப்படலாம் என்ற தனது கருத்தை இந்தியப் பத்திரிகையாளர் சபை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

சில பத்திரிகையாளர்களுக்கு எதிராக தமிழக சட்டப் பேரவை கொண்டு வந்த உரிமை மீறல் தீர்மானம் தொடர்பாக இச்சபை தெரிவித்திருந்த பரிந்துரைகள் பாராளுமன்ற உரிமைகள் மற்றும் பத்திரிகைச் சுதந்திரத்தை பாதுகாக்கும் வகையில் இருந்ததாக அச் சபையினர் மேலும் கூறினர்.

உரிமை மீறப்பட்டதாக சொல்லப்படுவதை நீதிமன்றத்தில் ஆட்சேபிக்கப்பட்டு அப் புகாரில் நீதிமன்றம் கூறிய தீர்ப்பில் சட்டப் பேரவைகள் ஒத்துழைத்தால் குடிமக்கள் அனைவருக்கும் நம்பிக்கை ஏற்படுமென்றும் அச் சபை மேலும் கூறியுள்ளது.

# கடற்புலிகள் நடாத்தும் விளையாட்டுப்போட்டி

வடமராட்சி கடற்புலிகளினால் மாபெரும் விளையாட்டுப் போட்டிகள் இன்றும் நாளையும் (4,5-ம்திகதிகளில்) பருத்தித்துறை துறைமுகத்தில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 7 மணிக்கு தமிழீழ கடற்படைத் தளபதி திரு. கங்கைஅமரன் தலைமையில்வல்வெட்டித்துறைவேவில் பகுதியில் நீச்சல் போட்டிகள் ஆரம்பமாகி தொடர்ந்துபருத்தித்துறை துறைமுகத்தில் பல போட்டிகள் இருதினங்கள் நடைபெறவுள்ளன.

நாளை5ஆம்திகதிஇரவு7.00 மணிக்கு தீருவில் மைதானத்தில் மாபெரும் கூட்டமும் பரிசளிப்புவிழாவும் நடைபெறும். கடற்படைவிசேடதளபதிதிரு. சூசை பரிசில்களை வழங்குவார். [82]

# எதிர்க்கட்சிகளில் பிளவு அரசாங்கம் ஊக்குவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சிக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் முக்கியகட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் பிளவுகள் ஏற்பட்டிருக்கிறது. இப் பிளவுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு அரசாங்கம் தீவிர முயற்சி எடுத்து வருகிறது.

கட்சியின் முக்கிய பிரமுகர்களான அனுரா பண்டாரநாயக்காவுக்கும் சந்திரிக்கா குமாரணதுங்காவிற்கு மிடையில் தற்பொழுது விரிசல் அதிகரித்து வருகிறது. இவர்களுக்கிடையிலானவிரிசலால்எதிர்க்கட்சிக் கூட்டணியிலும்பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய நிலை உருவாகி இருக்கிறது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மே தினப் பேரணியில் கலந்துகொள்வதற்குசந்திரிக்காகுமாரணதுங்காவும் அவருடைய குழுவினரும் மறுத்துவிட்டனர். இந்த நிலையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அரசாங்கம் வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் ஊடாகவும் ஏனைய வழிகளிலும் எதிர்க்கட்சிக் கூட்டணிக்குள் விரிசல்களை விரிவுபடுத்துவதற்கு தீவிர முயற்சி எடுத்து வருவதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. எதிர்க்கட்சிக் கூட்டணியினரைக்கண்டு அரசாங்கம் தடுமாறிக் கொண்டிருந்த நேரத்தில் இப்பிளவுகள் ஏற்பட்டிருப்பது அரசிற்குகிடைத்திருக்கும் அதிர்ஷ்டத்தின்அறிகுறி எனக் கருதப்படுகிறது.

# ஆனைக்கோட்டைமோதலில் ஏழுபேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இரு குழுவினருக்கிடையில் நடைபெற்ற மோதலில் ஏழுபேர் படுகாயமடைந்துள்ளனர் தொழில் தகராறு காரணமாகவே இவ்விரு குழுவினருக்கிடையில் மோதல் மூண்டதாக தெரியவருகின்றது.

மேற்படி சம்பவம் ஆனைக்கோட்டை சாவக்காட்டுப் பகுதியில் நேற்றுமாலை3 00மணியளவில் இடம்பெற்றது. இச்சம்பவத்தின் போது வாள், கத்தி. அலவாங்கு, பொல்லு, உலக்கை போன்ற ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. ஒரு குழுவினரை மற்றைய குழுவினர்எதிர்பாராதவிதமாக மேற்படி ஆயுதங்களைக் கொண்டு கடுமையாகத் தாக்கினர். இதனால் தாக்குதலுக்குள்ளான குழுவினர் அதிக பாதிப்பிற்கு உளளாகினர். இச் சம்பவத்தில் எஸ்.வீரபாகு (வயது 40), கே. அருமைராசா (வயது27), எஸ்.முத்துலிங்கம் (வயது34), எஸ். வடிவேலு (வயது 27), எஸ் தங்கலிங்கம் (வயது 16), எம். மல்லிகாதேவி (வயது31), சின்னத்தம்பி ஆறுமுகம்(வயது 36) ஆகியோர் படுகாயம் அடைந்துள்ளனர். இவர்கள் தற்போது யாழ். போதனா மருத்துவமனையில் விசேட சிகிச்சைபெற்று வருகின்றனர். இச்சம்பவம் தொடர்பாக தமிழீழ காவல்த் துறையினர் விசாரணை செய்துவருகின்றனர். (பா)

## யாழ். பல்கலைக் கழகத்தில்

# கடல்வள பீடம் அமைக்க நோர்வே உதவத் தயார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் கடற்துறை, கடல்வள கல்விப் பீடம் ஒன்றை அமைப்பதற்கு வேண்டிய உதவிகளை வழங்க நோர்வே நாட்டு ட்ரொம்கோ பல்கலைக் கழகம் விருப்பம் தெரிவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடல் வளத்தைத் தமிழ் மக்கள் பயன் பொருத்தமாய்ப் பயன்படுத்த கடற்துறை கடல் வள கல்வியை மேம்படுத்த வேண்டிய தன் அவசியத்தைச் [சென்றமாதம் நோர்வே சென்றிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராசா ட்ரொம்கோ பல்கலைக் கழக துணை வேந்தர் ஒலோடி மெஜோசுக்கு எடுத்துரைத்திருந்தார். அதன் விளைவாகவே ட்ரொம்கோ பல்கலைக் கழகம் உதவ முன் வந்துள்ளது.

# இராணுவ வீரர் தற்கொலை

இராணுவ வீரர் ஒருவர் தனக்குத் தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார். இதனை வவுனியா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. கடந்த வாரம் இச் சம்பவம் வவுனியா மாமடுவவில் நடந்திருக்கிறது. 19 வயதான டி.எம். பியசேன என்ற இராணுவ வீரரே இறந்தவர். இவரது மரண விசாரணை வவுனியா ஆஸ்பத்திரியில் நடைபெற்றது. மரணவிசாரணை அதிகாரி கே. அமிர்தலிங்கம் தற்கொலை மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

# தனிநாட்டுப் போராட்டம் தமிழ்நாட்டில் தீவிரம்

(சென்னை)

தனித் தமிழ் நாடு கோரும் கோஷம் தமிழகத்தில் வலுவடைந்து வருவதாக பொலிசார் கூறியுள்ளனர்.

புரட்சிகர இளைஞர் லீக், மக்கள் யுத்தக் குழு, முற்போக்கு இளைஞர் முன்னணி, முற்போக்கு மாணவர் முன்னணி என்பன இணைந்து சென்னையிலுள்ள குறளகம் கட்டடத்திலிருந்து ஊர்வலம் ஒன்றை நடத்தியதையும் இந்த ஊர்வலத்தில் ''தனித்தமிழ் நாடு வேண்டும்'' ''ஆயுதப் போர்மூலம் இதனை அடைவோம்'' என்பன போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டதையும் பொலிசார் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மேலும் மதுரையிலுள்ள தலைமை அலுவலகத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு மதுரையிலிருந்து நூறுமைல் தொலைவில இருக்கும் சுரளி மலை கைலாசநாதர் குகைக் கோயிலில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு போன்றவைகளில் தனித் தமிழ் நாடு கோரும் தீவிரவாதிகளின் தொடர்பு இருக்கலாமெனவும் பொலிசார் கருதுகின்றனர்.

# தீவுப்பகுதியிலிருந்து 12 பேர் யாழ். வந்தனர்

குமண கப்பலில் தீவுப்பகுதியைச் சேர்ந்த நோயாளிகள் உட்பட 12 பேர் யாழ் வைத்தியசாலைக்கு எடுத்து வரப் பட்டனர்.

கடற்படையினரின் படகு மூலம் காங்கேசன்துறைக்கு எடுத்துவரப்பட்ட இவர்கள் குமண கப்பல்மூலம் பருத்தித் துறை துறைமுகத்திற்கு வந்து யாழ். வைத்தியசாலைக்கு வந்தனர்.

இவர்களில் எட்டுப் பேர் நோயாளிகளாவர். இவர்கள் நயினாதீவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது(82



## 5-ம் நாள் நினைவஞ்சலி

**கப்டன் அறவாணன் (தவம்)**
**(வேலாயுதபிள்ளை தவக்குமார்)**

தாண்டு போன தமிழர் உரிமைகளை
தோண்டி எடுக்கப் புறப்பட்ட
வீரவேங்கை கப்டன் அறவாணா!
அண்ணா! அதிகாலை ஒன்றிற்காய்
அஸ்தமித்த வேளையில் — உலகத்தின்
உள்ளத்தில் உதயமாகி விட்டாய்

சரித்திரத்தின் பிரகாசிப்பில்
சாய்ந்து போன கோபுரம் நீ
சரிந்து கிடந்த சந்ததியை
நிமிரச் செய்த வீரமகன் நீ

சரித்திரத்தில் உன் சாவு சகிக்க முடியாதது
தான் - ஆனாலும் சமாளித்துக் கொண்டோம்
விடியலைத் தடுத்த வேலிகளைப் பிரிப்போம்
அன்றோ இந்தியனின் வலையில் சிக்கினாய்
இன்றோ இனவெறி பிடித்த சிங்கள
இராணுவத்தினருடன் தச்சன்காட்டு
மண்ணுக்கு உரமானாய்!

இறப்புக்கள் தொடர்ந்து
இதயத்தை வருத்தினாலும்
எதிரியை நோக்கியே - எம்
கால்கள் விரையும் கரங்கள் உயரும்!

இரத்தம் வடிந்தாலும் எங்கள் முகங்கள்
வேதனைத் தீயில் வேகாமல்
வெற்றிக் களிப்பால் சிவப்பாகட்டும்!!
நாளை மலரப் போகும் தமிழீழத்தில்
உங்கள் பெயர்கள் உதயமாகட்டும்!

பெரியரசடி,
சாவகச்சேரி.

(சி/4362) -குடும்பத்தினர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மே மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## பௌத்த

பேசும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்:

சில பத்திரிகைகள் இன, மத பூசல்களை நாட்டில் தூண்டிவிடுவதற்குக் காரணமாயிருக்கின்றன என்று தெரிவித்த அமைச்சர் அக்கறையுள்ள சில நாடுகள் அல்லது தனிநபர்களின் தலையீடுஇதில் இருக்கிறதா என்பது அரசுக்குத் தெரியவில்லை என்றார். இதன் பின்னால் சில சக்திகள் செயற்படுகின்றதா என்பது குறித்து அரசு விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

நாட்டில்புலிகள் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக்காண அரசு முயற்சிக்கும் போது சிலர் மதப் பிரச்சினையைத் தூண்டிவிடப்பார்க்கின்றார்கள். இராணுவ ரீதியிலோ அன்றிச் சமாதான வழியிலோ இனப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக்காண அரசு தயாராக உள்ளது.

மகாசங்கத்தில் ஒரு பிரிவினர் நல்ல நோக்கத்துடன் வடக்கிற்குச் சென்று புலிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார்கள் ஆனால் இந்த முயற்சி பயன்தருமா என்பது தெரியவில்லை. புலிகள் அல்லது மற்றவர்களுக்குப் பின்னால் போவதன் மூலம் இப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. இந்த விஷயத்தில் மற்றவர்களை ஏன் அணுகவேண்டும்? என்று கேட்டார் அவர்.

அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியா ,இந்தியாஆகிய நாடுகளைப் போல் சிறுபான்மையினர் உரிமைகளைப் பாது காக்க அரசு விருப்பம் கொண்டிருப்பதாக ஜனாதிபதி வெளிப்படுத்தியதும், அரசு விட்டுக்கொடுக்கிறது என்று எதிர்க் கட்சிகள் குற்றம்சாட்டின. யு. என். பியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் கூடி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். ஆனால் சொந்தலாபம் கருதிச் சிலர் இதனை எதிர்க்கிறார்கள்- இவ்வாறு தகவல் ராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பல்லாயிரம்

குகளால் சிறப்புற அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலம் பூண்டிருந்தது.

மாலை 5 00 மணியளவில் மங்கள இசையுடன் இந்த விழா ஆரம்பமாகியது. தொடர்ந்து இரு இசை நிகழ்ச்சிகளையடுத்து சிறப்பு விருந்தினர் உரை இடம்பெற்றது.

திரு. சி. வி. கே. சிவஞானம் தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. விசு. யாழ். மாவட்டத் தளபதி திரு. செல்வராசா ஆகியோர் உரை நிகழ்த்தினர். தொடர்ந்து விசேட இசை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. (க)

## புல்லுமலையில்

மனை), சுத்தா, அவரதுமகள் சிறி, கருணாகரன், சொக்கலிங்கம், தங்கவடிவேல், சின்னவன் ,சசி, இராஜி ஆகியோர் இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டனர்.

அத்துடன் தங்கராஜா, நாகராஜா, அவரது மகன் சுரேஷ், கட்டையன், இரட்ணசிங்கம், தம்பி ஆகிய ஆறுபேர் இந்தச் சுற்றிவளைப்பின் போது காணாமல் போயுள்ளனர்.

## மன்னாரில்

ரவதைக்கு உள்ளாக்கப்பட்ட பலர் அகதிமுகாமிற்குள் அடைத்துவைக்கப்பட்டுள்ளனர். கடற்கரைப்பக்கமாகவுள்ள கறுக்காய் தீவை கடந்த வியாழனன்று சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இத் துப்பாக்கிப் பிரயோகத்தில் செல்வன் சிறிதரன் (30 வயது)பழனியாண்டி(70வயது) ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர்.ஏழு வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

இராணுவ நடவடிக்கையின் தோல்வியை அடுத்தே இந்த பழிவாங்கலில் இராணுவம் ஈடுபட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## பச்சைப்பட்டி

பட்டனர்.

அங்கு இடம் பெற்ற எறிகணை வீச்சுகள், விமானக் குண்டு வீச்சுகள் காரணமாக பத்தாயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி மடு அகதி முகாமில் தஞ்சமடைந்துள்ளமை தெரிந்ததே.

இதேவேளை மன்னார் மாவட்டத்தில் பிறப்பிக்கப் பட்டிருந்த ஊரடங்குச்சட்டம் நேற்று பகல் 12 மணியுடன் நீக்கப்பட்டிருப்பதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## மண்ணை

உரை நிகழ்த்தும்போது சிறிலங்கா இராணுவத்தினரது கொடூரத் தாக்குதல்களுக்கு உள்ளாகியிருக்கும் தென்தமிழீழக் கலைஞர்கள் இவ்விசை விழாவில் பங்குபற்றமுடியாத நிலையையிட்டு கவலை தெரிவித்தார்.

இன்று வடக்கில் நடாத்தப் பட்டுவரும் தமிழிசை விழா போன்று தென் தமிழீழத்திலும் விழாக்களை நடாத்துவதற்குரிய நிலைமையை நாம் உருவாக்குவோம் என்றும், இதற்கு அனைத்து மக்களது பங்களிப்பும் அவசியம் என்றும் அவர் கூறினார்.(க)